# செனட்டின் அங்கீகாரமில்லாத மசோதாக்கள் சட்டமாகும்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 90

யாழ்ப்பாணம் சித்திரை 30 றபிஉல் 17 வியாழக்கிழமை (13-5-71)

## 34வது ஷரத்தை நிறைவேற்ற முடிவு

கொழும்பு, வியா

மக்கள் பிரதிநிதிகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டு, செனட்சபையில் தேங்கிக் கிடக்கும் சட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு அரசியல் சட்டத்திலுள்ள 34-வது ஷரத்தைப் பயன்படுத்திக்கொள்ள இலங்கை ஆட்சிமன்றச் சரித்திரத்திலேயே முதல்தடவையாக திருமதி பண்டாரநாயகாவின் கூட்டணி அரசு முடிவு எடுத்துள்ளது.

மேல்சபையின் அங்கீகாரம்இன்றியே சட்டங்களை நடைமுறைப் படுத்துவதையே இது குறிக்கும்.

நிதி சம்பந்தமான மசோதா ஒன்றைத் தவிர வேறு எந்த மசோதாவும் மக்கள்சபையில் இருதடவைகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஆறு மாதங்கள் கழித்து 2-ம் தடவையும் செனட்டின் அங்கீகாரம் பெறாத நிலையில், கவர்னர் ஜெனரலின் அங்கீகாரத்துடன் அந்த மசோதாவை சட்டமாக்கலாம்.

செனட்டில் நிராகரிக்கப்பட்டுள்ள 3 மசோதாக்களும் மீண்டும் கூடிய விரைவில் செனட்சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. வர்த்தக ஸ்தாபன சுவீகரிப்பு திரைப்படக்கூட்டுத்தாபனம் ஆகியன சம்பந்தமான மசோதாக்கள் ஏற்கனவே இரு தடவைகள் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுவிட்டன.

34-வது ஷரத்தினைப்பயன்படுத்தி ஆட்சிமன்றம் முதல் இரு மசோதாக்களையும் சட்டமாக்கலாம் என்பதில் சட்ட நிபுணர் அரசியல் சட்டசம்பந்தமான வல்லுனர்கள் மத்தியில் சந்தேகம் இல்லை, ஆனால் செனட் ஒழிப்பு மசோதா விஷயத்தில் அது இரண்டாவது தடவையும் மக்கள் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டியுள்ளது.

34-வது ஷரத்தின் வாசகம் வருமாறு:- நிதி சம்பந்தமற்ற எந்த ஒரு மசோதாவும் மக்கள் பிரதிநிதிகள் சபையினால் இரு கூட்டங்களில் அங்கீகரிக்கப் படுமானால் (அ) அப்படியான ஒரு கூட்டத்தின் இரண்டாவது கூட்டத்துக்கு குறைந்தது ஒரு மாதத்துக்கு முன்பு முதல் கூட்டத்தின்போது செனட்சபைக்கு அனுப்பப்பட்டு அங்கு அதுநிறைவேற்றப்படாவிடில்-

(ஆ) அப்படியான இரண்டாவது கூட்டத்தின் பின்னர் அனுப்பப்பட்டுச்செனட்டில் ஒருமாதத்துக்குள் அல்லது கூட்டத்தொடர் ஆரம்பமான ஆறுமாதத்துக்குள் நிறைவேறாது போனால் செனட்டில் நிறைவேறாத நிலையிலேயே அம்மசோதா கவர்னர்ஜெனரலிடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றதும் சட்டமாகி விடும்'

இந்த ஷரத்தின் இதரப் பிரிவுகளின்படி அம் மசோதாவில் எதுவித மாற்றங்களும் செய்வதற்கு இடமில்லை. (சி பீ ஏ)

# பொதுவைபவங்களில் 150 பேருக்கு அனுமதி!

## ஒரு நிகழ்ச்சிக்கு ஒரு வைபவம் மாத்திரமே

கோட்டை. வியா

உணவு பரிமாறப்படும் பொதுவைபவங்களில் 150 பேருக்கு மேல் கலந்துகொள்ளக் கூடாது என்று நேற்று அரசாங்கம் அறிவித்தது.

ஒரு நிகழ்ச்சி சம்பந்தமாக ஒரேயொரு வைபவம் மட்டுமே நடக்க வேண்டும் என்றும் 150 பேருக்குமேல் அந்த வைபவத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்றும் நேற்று நடந்த மந்திரிசபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நாடு தற்போதுள்ள நிலைமையை முன்னிட்டு இவ்வித கட்டுப்பாடு கொண்டுவரப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### இவர்கள் வெளிநாடு செல்லலாம்

மருத்துவர்கள் பொறியியலாளர்கள் விஞ்ஞானிகள் மற்றும் தொழில் நுட்ப நிபுணர்கள் வெளி நாடுகளில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு அரசாங்கத்தின் நிபந்தனையின்பேரில் தற்போது அனுமதிக்கப்படுவார்கள் என அரசாங்கம் அறிவித்தது-

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை பெற விரும்புபவர்கள் நிதி அமைச்சினதும் வேலைவாய்ப்பு திட்ட அமைச்சினதும் ஆலோசனைகளுக்கமைய வெளிநாட்டமைச்சால் அனுமதிக்கப் படவேண்டும் என்ற முடிவு நேற்று நடந்த மந்திரிசபை கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

### தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியா

கொழும்பில் நேற்று இழுக்கப்பட்ட 346-வது தேசிய சுவீப்பில் முதல் மூன்று பரிசுகளை பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

முதலாவது பரிசு
11 Y 0371
இரண்டாம் பரிசு
10 B 0676
மூன்றாம் பரிசு
03 E 0354

டாக்ஸி, வாடகைக் கார்

## அதிககட்டணம்வசூலித்தால் சொந்தக்காரர் மீது வழக்கு!

யாழ்ப்பாணம், வியாழன்

அதிக கட்டணம் வசூலிக்கும் டாக்சி, வாடகைக் கார், வான் சொந்தக்காரர்கள்மீது வழக்குத் தொடரப் படுமென்று உயர்தரப் பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

அவசரகால நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு டாக்சி, வாடகைக்கார்ச் சொந்தக்காரர்கள் கூடிய கட்டணம் வசூலிப்பதாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கூடிய கட்டணம் வசூலித்ததாகப் பலர் புகார்செய்திருப்பதாகவும் இப்புகார்களுக்கு ஆதாரமிருந்தால் வழக்கு தொடரப்படுமென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

கூடிய கட்டணம் வசூலிப்போர் பற்றி உடனடியாகப் பொலிஸில் புகார்செய்யும் படியும் அவர் மேலும் தெரிவித்தார்.

பயங்கரவாதிகளின்

தாக்குதல் குறைகிறது

## எல்பிட்டிய 'தலைவன்' தற்கொலை!

கோட்டை, வியா

நாட்டில் பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டதாகவும் குருநாகல அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் மட்டும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் இடையிடையே இடம்பெற்றுவருவதாகவும் நேற்று அரசாங்கம் அறிவித்தது.

கேகாலை, மாத்தறை ஆகிய இடங்களிலுள்ள பயங்கரவாதிகள் அனுராதபுர காட்டுக்குள் பின்வாங்கி வருவதாகவும், எல்பிட்டிய தெனியாய ஆகிய இடங்களிலுள்ள பயங்கரவாதிகள் சிங்கராஜா காட்டுக்குள் தலைமறைவாகிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எல்பிட்டிய பயங்கரவாதிகளின் தலைவன் என்று கூறப்படும் பிரேமரத்தின தற்கொலை செய்துகொண்டு விட்டதாகவும் தெரிய வருகிறது. பல இடங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தபால்நிலையங்கள் சில தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்தது. ஆயினும் கடந்த வாரம் தாக்குதல் சம்பவங்கள் மிகவும் குறைந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

### அந்தியேட்டி அழைப்பு

கிளிநொச்சி பாராளுமன்ற அங்கத்தவர் திரு வி. ஆனந்தசங்கரி அவர்களின் மனைவியாலஞ்சென்ற கண்மணி ஆனந்தசங்கரி அவர்களது அந்தியேட்டிச் சடங்குகள் இன்று அவரின் பெற்றோர்களால் அவர்களின் இல்லத்தில் நடாத்தி வைக்கப் படும்.

க. நாகலிங்கம்
இல. 292/4
நாவலர் வீதி
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

8284

### அரச ஊழியருக்கு விசேஷ விடுமுறைகள் இல்லை

கோட்டை, புதன்

அரசாங்க ஊழியர்களுக்கான விசேஷ விடுமுறை தினங்கள் எல்லாவற்றையும் அரசாங்கம் ரத்துச் செய்துள்ளது. பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டமைச்சின் நிரந்தரக் காரியதரிசி இதுசம்பந்தமாகத் தெரிவிக்கையில், இந்த வருடம் முடியும்வரையிலான விசேஷ விடுமுறை தினங்கள் எல்லாம் சாதாரண வேலைநாட்களாக இருக்குமென்று கூறினார்.

## கைதான அரச ஊழியருக்கு கடும் தண்டனை

கோட்டை, புதன்

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்தினால் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள்.

தற்காலிக ஊழியரும், நாட்சம்பள ஊழியரும் கைது செய்யப்பட்ட தினத்திலிருந்து வேலைநீக்கம் செய்யப்படுவர். நிரந்தர ஊழியர் உடனடியாக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுவார்கள்.

சகல நிரந்தரச் செயலாளர்களுக்கும், இலாகாத் தலைவர்களுக்கும் பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. பி. மகாதேவா அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்தில் மேற்கண்ட விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### ஊரடங்கு நேரம்

இன்று மாலை
7-30
மணி முதல்
நாளை காலை
4-30
மணி வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்மாள் சினிமா

அன்றுதல் மீண்டும் ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தினசரி காலை 10-30 மேட்டினி ஷோ

பி. ப. 2-30

கௌரி கல்யாணம்

இன்று மட்டும்
RAJAH - JAFFNA
Daily
10-30a m 2-00&4-00p.m.
Gina Lollobrigida
Robert Viharo
in
STUNTMAN
(Color - From Paramount)

வெலிங்டன் சினிமா

யாழ்ப்பாணம்
தினசரி
காலை 10-30, பி. ப. 2-30
சிவாஜி—தேவிகா
நடித்த
அன்னை இல்லம்


## அன்னதானம்

புத்தூர், புதன்

கடந்தவாரம் ஊரெழு பர்வதவர்த்தினி அம்மன் ஆலயத்தில் சங்காபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. அன்றையதினம் ஆலயத்தில் அன்னதானமும் நடைபெற்றது.


மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m
Terry Thomas
in
It's A MAD, MAD, MAD, MAD WORLD
(Scope color)
தினசரி பி. ப. 2-00
ஜெய்சங்கர் - விஜயலட்சுமி
நடித்த
சபாஷ் தம்பி

ஸ்ரீ காளிங்கன்

இணுவில்
தினசரி
காலை 10-30, பி. ப. 1-30
ஜெமினி —சௌகார்ஜானகி
நடித்த
இரு கோடுகள்

REGAL - Jaffna
Daily- 10-30 a. m. & 2-30 p. m Only
The greatest war picture ever created in our history
Greater than THE GUNS OF NAVARONE
Frederick Stafford
in
EAGLES OVER LONDON
"லண்டனை நோக்கி கழுகுகள்"
என்னும் ஓர் பயங்கர யுத்தப்படம்

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி. ப. 2-00
சிவாஜி கணேசனும் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி
காலை 10-30
பி. ப. 2-00
மாஸ்ரர் பிரபாகர்
பேபி சுமதி - ஜெயசுமி
நடித்த
வா ராஜா வா

வெலிங்டன் (சாவகச்சேரி)
தினசரி காலை 10-00 பி. ப. 1-30
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
நம்பியார்—நாகேஷ்
மனோரமா மற்றும் பலர்
நடித்த
படகோட்டி
(ஈஸ்மன்கலர் சித்திரம்)
டைரக்ஷன்
T. பிரகாஸ்ராவ்

கெப்பிட்டல்
காலை 10, பி. ப. 1-30 மணி
பெரிய இடத்துப் பெண்

லிங்ஸ்லி
காலை 10, பி. ப. 1-30 மணி
தில்லானா மோகனாம்பாள்

றீகல்
காலை 10, பி. ப 1-30 மணி
ராஜசேவை

பிளாஸா
காலை 10, பி. ப. 1-30 மணி
சர்வாதிகாரி

அடுத்த வெளியீடு
முன்றெழுத்து
(மர்மச் சித்திரம்)


## தாச்சிப்போட்டி

யாழ்ப்பாணம், வியா

வேலணை ஸ்ரீமுருகன் சனசமூகநிலைய தாச்சி விளையாட்டுக் கோஷ்டிக்கும், அண்ணா விளையாட்டுக் கோஷ்டிக்கும் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற தாச்சிப் போட்டியில் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கோஷ்டியினர் 13 பழங்களையும், அண்ணா விளையாட்டுக் கோஷ்டியினர் 4 பழங்களையும் பெற்று ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கோஷ்டியினர் 9 மேலதிக பழங்களால் வெற்றிபெற்றனர்.

இப்போட்டிக்கு ஆசிரியர் விஜயன் மத்தியஸ்தம் வகித்தார்.

## தட்டுப்பாடு நீங்கியது

மன்னார், புதன்

மன்னாரில் தற்பொழுது மண்ணெண்ணெய், சீனி முதலிய பொருட்களுக்கு உள்ள தட்டுப்பாடு நீங்கிவிட்டது. இரண்டு மூன்று கிழமையாக இப்பொருட்கள் பங்கீட்டு முறையில் வழங்கப்பட்டுவந்துள்ளன.

## ஆண்டவன் நாமத்தை சொல்லுக

தாவடி, புதன்

'மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஒருகணமாவது நாளுக்கொருமுறை ஆண்டவன் நாமத்தைச் சொல்லுதல் வேண்டும். சைவசமயத்திலே பிறந்த ஒவ்வொருவரும் பிணிதீர்க்கும் அரிய திருமருந்தாகிய திருநீற்றை அணிய மறந்துவிடக்கூடாது' இவ்வாறு பிரம்மஸ்ரீ சி. வை. நித்தியானந்தசர்மா தாவடி பத்திரகாளியம்பாள் ஆலய தீர்த்தோற்சவத்தின்போது கதாகாலட்சேபம் நிகழ்த்துகையில் கூறினார்.

## திருச்சபைச் செய்திகள்

பருத்தித்துறை, வியா

பருத்தித்துறை மிசாமின் பிரதமகுரு வண. எஸ். சுவாம்பிள்ளை கரம்பன் மிசாமிற்கு மாற்றப்பட்டுள்ளார். கரம்பன் மிசாம் குருவான வண. கே. குணசீலன் இளவாலை மிசாமிற்கு மாற்றப்பட்டுள்ளார். கரவெட்டியைச் சேர்ந்த வண. சகோதரி யூடித் அம்புறோஸ், சகோதரியாவதற்கான முதல்வார்த்தைப் பாட்டை பளைக்ளூரில் எதிர்வரும் சனிக்கிழமை பெறுவார்.

## விலையதிகரிப்பு

மன்னார், புதன்

மன்னாரில் தற்பொழுது வீசும் சோழகக் கடுங்காற்றின் காரணமாக மீன்பிடித்தல் குறைந்துள்ளது. இதனால் மீன்களின் விலை அதிகரித்துள்ளது எனக் கூறப்படுகிறது.

## "ஒத்திப்போடுக"

கொட்டாஞ்சேனை, புதன்

அரசியல் திட்டம் சம்பந்தமான மக்கள் குழு, அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தை நாட்டின் நிலைமை சீராகும் வரை ஒத்திவைக்கும்படி பிரதமரைக் கேட்டுக்கொண்டுள்ளது.

வரும் வெள்ளிக்கிழமை மீண்டும் அரசியல் நிர்ணய சபை கூடவுள்ளது.

மொரட்டுவ, புதன்

பயங்கரவாதிகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவையும் வழங்குவதென்று மொரட்டுவ நகரசபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி[illegible] நடவடிக்கைகளுக்குப் பலத்த கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

## அறிவித்தல்

### திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை
### 1971ம் ஆண்டு வருடாந்த பொதுக் கூட்டம்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 1971ம் ஆண்டு ஆனி மாதம் 22ம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 9-30 மணிக்கு நடைபெறுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அங்கத்தவர்கள் எவரேனும், ஏதாவது தீர்மானங்களையோ அல்லது வேறு ஏதேனும் விடயங்களைக் கொண்டுவரவோ விரும்பினால் அத்தகைய தீர்மானங்களை அல்லது விடயங்களை கௌரவ காரியதரிசிக்கு 20-5-71ம் திகதி அல்லது அதற்கு முன்னர் எழுத்து மூலம் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

எஸ் கந்தையா,
கௌரவ காரியதரிசி
சரஸ்வதி மண்டபம்,
75, லொறன்ஸ் றோட்,
கொழும்பு-4.
6-5-71 3283

## தேவை

### இயந்திரம் பழுது பார்க்கும் பயிற்சியாளர்கள்

தகுதி: கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் குறைந்தது ஐந்து பாடமேனும் சித்தியெய்தியவராகவும், கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டு வருட வேதனத்துடன் இயந்திரக் கைவல்லுனராக தேர்ச்சி பெற்றவராகவும் இருக்கவேண்டும்.

அனுபவம்: இரண்டு வருடம் தனியார் நிறுவனங்களிலேனும் டீசல், மோட்டார் யந்திரம் பழுது பார்ப்பதில் அனுபவம் பெற்றிருப்பவராகவும் அல்லது நீர்கொழும்பு மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரிக்கு 6 (ஆறு) மாத காலம் யந்திரம் பழுது பார்த்திருப்பவராக இருக்கவேண்டும்.

ஜே. பி மீன்பிடி வலை
உற்பத்தி ஆலை
133, மீதோட்டமுல்ல வீதி,
வெல்லம்பிட்டி.
3280

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வரி விளம்பரம்

### தேவை

கன்னை சுற்றாடலில் 8 மைல் விஸ்தீரணத்திற்குள் 30 அல்லது 40 பரப்பு வெறும் காணி விவசாயத்திற்கு தேவை. இடக்குவிடம், போக்குவரத்து வழி, வான் பயிர்கள் தொகை, தண்ணீர் வசதி, விலை முதலிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 2784 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2784

சைவ சமையல் தெரிந்த வீட்டு உதவிப் பெண் தேவை. நேரில் வரவும். 25/1, செட்டித் தெரு நல்லூர். 2476

### விற்பனைக்கு

ஆங்கில ரைப் ரைட்டர் ஒன்று (அண்டவூட்) நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு நேரில் சந்திக்கவும். த. அருளானந்தசிவம், 19, சிவன்பண்ணை றோட், யாழ்ப்பாணம் 2800

புளியங்குளத்தில் பூநகரி சந்தியில் நன்றாகத் திருத்தப்பட்ட 15 ஏக்கர் வயல் நிலம் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். ஞா. தேவராசா, No 83, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 2477

## அச்சுவேலி கி.ச. புதிய தலைவர்

அரியாலை, வியாழன்

அச்சுவேலி கிராம சபையின் புதிய தலைவராக பிரபல ஆயுள்வேத வைத்தியர் திரு. வே. தம்பித்துரை தெரிவு செய்யப்பட்டார். இவர் பொதுநல ஊழியரும் வளாயைச் சேர்ந்தவருமாவர்.

தற்பொழுது சபையில் உள்ள 13 உறுப்பினர்களில் 6 பேர் இக்கூட்டத்துக்கு சமூகமளிக்கவில்லை. மிகுதி 7 உறுப்பினர்கள் சபையில் சமூகமளித்து தமது ஆதரவை தெரிவித்தனர். இக்கிராம சபையின் முந்திய தலைவர் திரு நா. சுந்தரமூர்த்தி காலமானதை தொடர்ந்து இப்புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டார்.

திரு கே என் கணபதிப்பிள்ளை (சின்னமணி) உபதலைவராவர்.

## கேள்வி அறிவித்தல்

கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் லொறிச் சொந்தக்காரர்களிடமிருந்தும், பதிவு செய்யப்பட்ட டிரான்ஸ்போர்ட் ஏஜன்டுகளிடமிருந்தும் அரிசி, மா, மற்றும் பொருட்கள் ஏற்றுவதற்கு ரெண்டர் கோருகின்றது. ரெண்டர் பணமாக ரூபா 50/- கட்டி ரசீது பெற்றவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ரெண்டர்கள் 25-5-71க்கு முன் பதிவுத்தபாலில் பொதுமுகாமையாளர், கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். ஏற்றப்படவேண்டிய குறைந்த எடை 160 அந்தர்.

### விபரம்

1. பருத்தித்துறையிலிருந்து - கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்.
2. C. W. E யாழ்ப்பாணத்திலிருந்து கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்.
3. காங்கேசன்துறை தானியக்களஞ்சியம் - கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்.
4. யாழ்ப்பாணம் தானியக்களஞ்சியம் - கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்.
5. தாவத்துளி தானியக்களஞ்சியம் - கட்டைவேலி - நெல்லியடி ப நோ. கூ. சங்கம்.
6. சிமெந்துத் தொழிற்சாலை (K. K. S.) - கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

இங்ஙனம்
கு. சோமசுந்தரம்,
பொதுமுகாமையாளர்.

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்,
கரவெட்டி.
11-5-71. 3281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்கு உதவி கொடுப்பதை நிறுத்தச்சொல்கிருர் செனட்டர் கென்னடி

நியூயோர்க், மே. 12

கிழக்குப் பாகிஸ்தானில் அமைதி ஏற்பட்டு நிவாரண வேலைகள் ஆரம்பமாகும் வரையில் பாகிஸ்தானுக்கான சகல விதமான உதவிகளையும் நிறுத்தி வைக்க வேண்டும் என்று செனட்டர் எட்வேட் கென்னடி தெரிவித்திருக்கிருர்.

இந்தியாவில் வந்து குவிந்து கொண்டிருக்கும் அகதிகளின் உதவிக்கென பெருந்தொகை பண உதவி செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இந்த அகதிகள் மத்தியில் பெரும் உணவுப்பஞ்சம் ஏற்பட்டுவிடக்கூடும் என்று அவர் எச்சரித்தார்.

இதே சமயம், கிழக்குப் பாகிஸ்தானில் ஆக்கவுரா அரங்கில் இன்னமும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக புதுடில்லிக்கு செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. நேற்று ஆக்கவுரா அரங்கில் நடைபெற்ற மோதலில் 12 சிப்பாய்களை விடுதலைப் படையினர் கொன்றுவிட்டதாகச் செய்திகள் கூறின.

மேற்கு வங்கத்தில் வந்து சேர்ந்துள்ள அகதிகளின் தேவைகள்பற்றி மேற்கு வங்க அரசாங்கம் ஐ. நா. தூதுக்குழுவிடம் ஒரு அறிக்கையைக் கொடுத்துள்ளது. இத்தலைவலை மேற்கு வங்க முதலமைச்சர் திரு அஜாய் குமார்முகர்ஜி தெரிவித்துள்ள அகதிகளின் தேவைகளைக் கவனிப்பதற்காக மத்தியஅரசு ஒரு கோடி 60 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளது.

இதேவேளையில் டாக்காவிலும், கல்கத்தாவிலும் உள்ள இந்திய பாகிஸ்தானிய ராஜதந்திர ஊழியர்களைத் திருப்பிக்கொள்வது சம்பந்தமான பிரச்னையில் சுவிட்சர்லாந்து தலையிட்டு சமரசம் செய்துவைக்க முன்வந்துள்ளது. சுவிஸ் அரசின் இந்த உதவியை இந்தியா ஏற்றுக்கொண்டு விட்டதாக புதுடில்லி செய்திகள் கூறுகின்றன. பாகிஸ்தானும் இதனை ஏற்றுக்கொண்டு விட்டதாக கராச்சியிலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

## அம்பாறை, பொலநறுவை: நிலமை சீராகிறது

கோட்டை, புதன்

அம்பாறை, பொலநறுவை மாவட்டங்களில் நிலமை சகஜ நிலைக்குத் திரும்பிக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. அம்பாறை மாவட்டத்து இணைப்பு அதிகாரி தமது பொறுப்புகளை சிவில் அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார் நிலைமை சீராகிக்கொண்டு வருவதைத்தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அம்பாறையில் முகாமிட்டிருந்த கடற்படையினர் திருப்பி அழைக்கப்படுவார்கள். ராணுவத்தினர் தொடர்ந்து அங்கிருப்பர்.

ஹிங்குரகொடையில் சேதத்துக்குள்ளான காரியாதிகாரி அலுவலகத்தையும், பொலிஸ் நிலயத்தையும் செலவில்லாமல் புனர்நிர்மாணம் செய்வதற்கு இப்பகுதிமக்கள் முன்வந்திருப்பதாக பொலநறுவை அரசாங்க அதிபர் அறிவிக்கிருர்.

## அதிபர் சதாத் ராணுவத் தலைவர்களுடன் ஆலோசனை

கெய்ரோ, மே 12

எகிப்திய அதிபர் திரு. அன்வர் சதாத் தமது ராணுவத்தளபதிகளை அழைத்து ஆலோசனைகள் நடத்தியிருக்கிருர்.

திடீரென்று மீண்டும் சண்டை தொடங்கினுல் படைகள் உசாராக இருக்க வேண்டிய அவசியத்தை அவர் தளபதிகளுடன் ஆலோசித்திருக்கவேண்டும் என்று தெரிகின்றது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு ரோஜார்ஹாடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பற்றியும் அவர் தளபதிகளிடம் விளக்கியதாகத் தெரிகின்றது. சூயஸ் கால்வாயைத் திறந்துவிடுவது சம்பந்தமாக அதிபர் சதாத் தெரிவித்த யோசனை இன்னமும் மாறவில்லையென்று எகிப்திய அமைச்சர் ஒருவர் தெரிவித்திருக்கிருர்.

அரபு - இஸ்ரேல் பிரச்னை தீர்வதற்கு நீண்டநாட்கள் பாரதூரமான முறையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டியிருக்கும் என்று இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் திரு. அபா ஈபான் கூறியிருக்கிருர்.

ஜோர்டானின் ஒரு அங்குலத்தைக் கூட விட்டுக்கொடுக்கப் போவதில்லையென்று ஜோர்டான்மன்னர் ஹூசேன் தெரிவித்திருக்கிருர்.

—

## மிளகாய் கொள்வனவுக்கு நடவடிக்கை

குருநகர் புதன்

தீவுப்பகுதிகளில் மிளகாய் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை மேலும் ஊக்குவிப்பதற்கும் மிளகாய் உற்பத்தியை மேலும் அதிகரிக்கச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள மண்டைதீவு, அல்லைப்பிட்டி வேலணை, சரவணை, நாரந்தனை, சரம்பன் அனலைதீவு நயினுதீவு ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகளிடம் மிளகாய் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் வடபகுதி விவசாய கூட்டுறவாளர் சங்க சமாசத் தலைவர் தெரிவித்தார்.

......

## அடையாள அட்டைகள்

கோட்டை, புதன்

18 வயதுக்கு மேற்பட்ட சகலபிரஜைகளுக்கும் அடையாளஅட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்றுவருவதாகவும், இதற்கென தனியான திணைக்களம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னைய அரசாங்ககாலத்தில் நிறைவேற்றப்பட்ட அடையாள அட்டைகள் சட்டம் இன்னுமொருமுறை ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதும் அமுல்செய்யப்படும்.

......

## சரசாலை கொலை முயற்சிவழக்கு மே 20-ல் விசாரணை

யாழ்ப்பாணம், வியா

சரசாலை கொலைமுயற்சி வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சன்ட் தமோதரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதியரசர் விசாரணையை இம் மாதம் 20-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் சரசாலையில் 70-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் தேதி சம்பநாத பிள்ளையை கொலை செய்ய முயற்சித்ததாக தருமலிங்கம் கிட்டினன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள்சார்பில் அட்வகேட் எஸ் நகராசா புறக்டர் வி யோகேஸ்வரனின் அனுசரணையுடன் ஆஜரானர்.

## புதுவித முப்பரிமாணப் படம்

மாஸ்கோ, மே 12

விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தால் தயாரிக்கப்பட்ட புது மாதிரியான முப்பரிமாணப் படம் ஒன்றைக் கண்ணாடிகளின் உதவியின்றி மாஸ்கோ சினிமா ரசிகர்கள் பார்த்தனர் மிருகங்கள் பறவைகள் சம்பந்தமான படம்அது. அந்தப் படத்தைப் பார்க்கும்போது பறவைகள் அவர்கள் தலைக்குமேல் பறப்பது போலவும் அவர்களை நோக்கிச் சுருமீன்கள் பாய்ந்து வருவது போலவும் தோன்றியது.

சந்திரன் மற்றிய முப்பரிமாணப் படங்களையும் ஹெலிகாப்டரிலிருந்து எடுக்கப்பட்ட காட்சிகளையும் மாஸ்கோ ரசிகர்கள் பார்த்தனர்

ஏ. ஆந்திரயேவ்ஸ்கி டைரக்ட் செய்த 'சர்க்கஸ் காட்சி' என்ற புது மாதிரியான துண்டுப்படம் ஒன்றையும் அவர்கள் கண்டனர்.

—

## சோவியத்தேசிய இலக்கிய வரலாறு

மாஸ்கோ, மே 12

37 ஆராய்ச்சி நிலையங்களைச் சேர்ந்த அறிஞர்களும், விமர்சகர்களும் வரலாற்று ஆசிரியர்களும் ஆறு பாகங்களைக் கொண்ட சோவியத் தேசிய இலக்கியத்தின் வரலாறு ஒன்றைத் தொகுத்துள்ளனர். இந்நூலின் முதற்பாகம் இப்பொழுது வெளிவந்துள்ளது.

சோவியத் தேசிய இலக்கியம் என்ருல் 89 மொழிகளில் வெளிவரும் நூல்களைக் குறிப்பதாகும்.

அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய ஐம்பது ஆண்டுகளில் சோவியத் நாட்டின் 20 தேசிய இலக்கியங்கள் எவ்வாறு வளர்ந்துள்ளன என்பதை இந்த முதல் பாகத்தில் காணலாம்.

## கரவெட்டி பௌத்த பாடசாலைக்கு ரூ.20,000

பருத்தித்துறை, வியாழன்

கரவெட்டி நாரத மகா வித்தியாலயக் கட்டடவிஸ்தரிப்புக்கெனக் கல்விப் பகுதி 20 000 ரூபாய் ஒதுக்கியுள்ளதாக மேற்படி வித்தியாலய தலைமை ஆசிரியருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இக் கட்டட வேலையைப் பெற்ருர் — ஆசிரியர் சங்கமோ அன்றித் தனிப்பட்ட ஒப்பந்தகாரரோ செய்வதென்பது பற்றி இது வரை தீர்மானிக்கப்படவில்லை உத்தேசப் புதிய கட்டடங்களில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள், நூலகம் ஆகியனவும், மனையியல், தொழில்நுட்பக் கலைகள் ஆகிய பாடங்களுக்கான அறைகளும் இடம் பெறுமெனத் தெரிகிறது. நாட்டின் நெருக்கடி நீங்கியதும் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

அச்சுவேலி தொழிற்பேட்டை

## கைத்தொழில் குழு 25-ல் யாழ். வருகிறது

யாழ்ப்பாணம், வியாழன்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் சம்பந்தமாக ஆராய்வதற்காக இம்மாதம் 25-ம் திகதி கைத்தொழில் குழுவொன்று யாழ்ப்பாணம் வரவிருக்கிறது. கைத்தொழில் பேட்டையில் தொழிற்சாலைகள் நிறுவ விரும்பும் விண்ணப்பதாரர்களிடமிருந்து அவர்களின் திட்டங்களை இந்தக் குழு கேட்டறியும்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை விரைவில் ஆரம்பித்து கருட்டு, கருவாடு போன்ற உற்பத்திகளை அதிகரிக்க ஊக்குவிக்கவேண்டும் என்று சிபார்சு செய்த கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் குழுவொன்றும் இம்மாதம் 25-ம் 26-ம் திகதிகளில் விண்ணப்பதாரரை நேரில் சந்தித்து அவர்களுடைய தொழில் ஸ்தாபித திட்டங்கள்பற்றிக் கேட்டறியும். இந்தக் குழுவில் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா, திரு சோமபால குணதீர, திரு எறிக் சில்வா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

......

## அபிவிருத்தி ஆலோசனை

திருகோணமலை, புதன்

கோடைப் போக நெல் விவசாய அபிவிருத்திக்கான ஆலோசனைக் கூட்டம் திருமலை அரசாங்க செயலகத்தில் கூட்டப்பட்டது. இக் கூட்டத்திற்கு திருமலை அரசாங்க அதிபர் திரு. தில்லைநடராஜா தலைமைதாங்கினார். கூட்டத்திற்கு கிராமவிவசாய அங்கத்தவரும் விவசாய அபிவிருத்தித்திட்டஊழியர்களும் கலந்து கொண்டனர். (ந. நி)

## யாழ். மத்திய கல்லூரியின் சாதனை

யாழ்ப்பாணம், வியா.

யாழ் மத்திய கல்லூரியின் ஒநாய் குருளைக் குழுவினர் 1970-ம் ஆண்டின் இலங்கையின் சிறந்த ஒநாய் குருளைக் குழுவினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்

இவ்வருடம் ஜூலை மாதம் கொழும்பில் மேற்படி குழுவினர் சேர் அன்றூஸ் கல்டிக்கட் கிண்ணத்தை மகாதேசாதிபதியிடம் இருந்து பெற்றுக்கொள்வர். யாழ் மத்தியகல்லூரி ஒநாய் குருளையினர் 1969-ம் ஆண்டும் இலங்கையின் சிறந்த ஒநாய்க்குருளையினராகத் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

......

## புதிய நிர்வாகிகள்

பருத்தித்துறை, வியாழன்

தென்புலோலி இலங்கேஸ்வரன் மன்ற புதிய உத்தியோகத்தர் வருமாறு:

போஷகர்கள்: திருவாளர்கள் வை. நாகலிங்கம் கா. நடராசா.

தலைவர்: திரு. ம. தியாகராசா உபதலைவர் திரு. ஆ. சு. அருள்தாசன், செயலாளர் திரு க. தர்மரத்தினம் உபசெயலாளர்: திரு. இராபொன்னம்பலம், பொருளாளர்: திரு. கா. சிவபாதம், கணக்குப்பரிசோதகர் திரு. சி. தில்லைநாதன்.

ஏழுபேர் கொண்ட நிர்வாகசபையும் சனசமூக நிலைய மேற்பார்வைக்கென ஐந்துபேர் கொண்ட ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டன.


'சோவியத் நாடு'

★ சோவியத்-ஈழத்து மக்களின் நட்புறவின் குரல் ''சோவியத் நாடு''

'சோவியத்நாடு' வாசியுங்கள்

★ சோவியத் மக்களின் சாதனைகளைப் பற்றியும், விசேஷமாக மத்திய ஆசிய மக்களின் புதிய வாழ்வைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.



'சோவியத்நாடு' வாசியுங்கள்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்:-

தகவல் பகுதி, சோவியத் ஸ்தானிகராலயம்,

27, ஸர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு-7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சி ஆசிரியர்களும் சம்பளம் பெற்றனர்

— நமது சிறப்பு நிருபர் —

வடபகுதியிலுள்ள ஆசிரிய பயிற்சிக்கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கான சம்பளங்கள் நேற்று முன்தினம் வேம்படி மகளிர் கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன.

வடமாநிலக் கல்வித் திணைக்களக் கணக்காளர் திரு. மு. நல்லையா தலைமையில் சென்ற அதிகாரிகள் குழுவொன்று கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சி மாணவிகள், நல்லூர், கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்கள் ஆகியோருக்கு தனித்தனி காசோலைகள் மூலம் சித்திரை மாதச் சம்பளம் வழங்கியது. கணக்காளர் பிரிவைச் சேர்ந்த நிதி உதவியாளர் திரு. ஜெகதீசசிங்கம், பிரதம எழுதுவினைஞர் திரு. ஸ்கந்தா, திருவாளர்கள் சிவராஜா, தர்மலிங்கம், சந்திரசேகரம், தேவதாஸ் ஆகியோரைக்கொண்ட குழு திறமான ஒழுங்குமுறைகளை வகுத்து காலை 10-30 மணிக்கே சகலவேலைகளையும் செய்துமுடித்தது.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு தனி ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது அதன் அலுவலர்கள், விரிவுரையாளர்களை மட்டும் வைத்துக் காசோலைகளை வழங்கினர். ஆனால் ஒழுங்குகள் இவர்களைப் பொறுத்தவரை எதிர்மாறாகவே இருந்தன. ஒழுங்குகள் காலைவாரி விட்டன. எல்லாம் ஒரே குழறுபடியாக மாறிவிட்டது. பயிற்சி ஆசிரியர்களும் ஒழுங்கையோ கட்டுப்பாட்டையோ கடைப்பிடிக்காதவிட்டனர். யாழ். புதிய மார்க்கட் வேம்படி மண்டப மேல்மாடியில் திறக்கப்பட்டு விட்டதோ என்ற நினைவு கூட எனக்கு ஏற்பட்டது அதிபர், விரிவுரையாளர்களுக்கு முன்னாலேயே வருங்கால ஆசிரிய திலகங்கள் நடந்துகொண்டமுறை நம்பிக்கையூட்டுவதாக அமையவில்லை. இத்தனை குழறுபடிகளையும் சிக்கவிழ்த்து வேலை முடிக்க பி. ப ஒருமணி மட்டில் சென்றுவிட்டது. இந்தப் பொறுப்பையும் வடமாநிலக் கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் விட்டிருந்தால் எல்லோருக்கும் வேலை சுலபமாக இருந்திருக்கும். என்னதான் இருந்தாலும் நிர்வாகத்திறமையின் அவசியத்தை இது உறுத்தியது. வடமாநிலக் கல்வித்திணைக்களம் பெற்ற புகழுக்கு இது ஒரு கண்ணாடிபோலும்!

## சம்பளம் கிடைத்தது

யாழ்ப்பாணம், வியா

தொல்புரத்திலுள்ள சுருட்டுத்தொழிற்சாலையில் சம்பளம் வழங்கப்படாத தொழிலாளருக்கு அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்க தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் முதலாளியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சம்பளத்தை பெற்றுக்கொடுத்தார்.

இத்தொழிற்சாலையிலுள்ள சில தொழிலாளருக்கு 3 மாதமாக சம்பளம் வழங்கப்படாமலிருந்தது. சம்பளம் பெறாத தொழிலாளர் சங்கத் தலைவருடன் தொடர்பு கொண்டதை தொடர்ந்து அவர்களுக்கு சம்பளம் கிடைத்தது.

— —

## கிணற்றுக்குள் நாகதம்பிரான் சிலை!

நவாலி, புதன்

நவாலியிலுள்ள கிணறொன்றிலிருந்து பல வருடகாலத்துக்கு முந்திய நாகதம்பிரான் உருவச்சிலையும், வெள்ளிப் பாம்பொன்றும் எடுக்கப்பட்டுள்ளன நவாலி சுடுகாடு நாச்சிமார் அம்மன் ஆலயத்திற்கு அருகிலுள்ள கிணறொன்றிலிருந்தே இவை ஒருவரால் எடுக்கப்பட்டன.

ஒல்லாந்தரால் ஆலயங்கள் தகர்க்கப்பட்ட காலத்தில் இவைகள் கிணற்றில் வீழ்ந்ததாக நம்பப்படுகிறது, எடுக்கப்பட்ட விக்கிரகம் ஊர்வலமாக வந்து ஆலயத்தில் வைக்கப்பட்டது. அவ்வேளையில் தீக்குளிப்பு வைபவமும் நடைபெற்றது.

## பயங்கரவாதிகளுக்கும் படை வீரர்களுக்கும் ஒரே சிகிச்சை

### செஞ்சிலுவைசங்கப்பிரதிநிதிதிருப்தி

கோட்டை, புதன்

பயங்கரவாதிகளுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பாதுகாப்புப் படையினருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை போலவே திருப்திகரமானதாக இருந்ததென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி தெரிவித்தார்.

பயங்கரவாதநடவடிக்கைகளில் ஈடுபட்டுகாயத்துக்குள்ளானவர்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து இலங்கையில் தற்போது தங்கியிருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி திரு. ஹெஜெட் ஸஸ்குஸர் மிகவும் திருப்தி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினரில் காயத்துக்குள்ளானவர்களுக்கு அளிக்கப்பட்டசிகிச்சைக்கும்இவர்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைக்கும் எவ்வித வித்தியாசமும் காட்டப்படவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

திரு. ஹெஜெட் அரசாங்கத்துக்கு தமது இதயபூர்வமான பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்.

ஜெனிவா ஒப்பந்தத்தின் 3-வது அம்சத்துக்கமைய இலங்கை அரசாங்கம்தனது பணியை நிறைவாகச் செய்துள்ளதை குறிப்பிட்டசெஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி, சுகாதார அமைச்சுக்கும் பயங்கரவாதிகளுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகுறித்து திருப்தியும், பாராட்டும் தெரிவித்து தனித்தனிக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார். திரு. ஹெஜெட் பயங்கரவாதிகளும், பாதுகாப்புபடைவீரர்களும் சிகிச்சைபெற்றுவரும் ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று பார்வையிட்டார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க இலங்கைக் கிளைத்தலைவர் திரு. ஏ. டி. எஸ். சமரநாயக்கா தகவல் தெரிவிக்கையில் காணாமல் போனவர்களைக்கண்டுபிடிப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவுமென்றும், இது சம்பந்தமாக ஜெனிவா நிபுணர்கள் இங்கு அனுப்பப்படலாமென்றும்கூறினார்.

## மென்பந்து கிரிக்கெட்:

# யங்லயன்ஸ் - அரியாலை 17-ல் மோதும்

யாழ்ப்பாணம், வியா.

அரியாலை மேற்கு சனசமூக நிலையத்தின் 52-வது சுதேசிய விழாவை முன்னிட்டு, நடாத்தப்பட்டு வந்த 'மென்பந்துக் கிரிக்கெட் நொக்கவுட்' போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் 17-ம் திகதி அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

இவ் இறுதிப் போட்டியில் வடமாகாணத்திலேயே மிகவும் பலம் கொண்ட 'மென்பந்தாட்டக் கழகங்களான "யங்லயன்ஸ்" கழகமும், "அரியாலை யுத்ஸ்" கழகமும் மோதிக்கொள்ளும்.

இந்த நொக்கவுட் போட்டியில் யங்லயன்ஸ் கழகம் பென்ஸ் விளையாட்டுக் கழகத்தை இன்னிங்ஸாலும், வளர்மதி விளையாட்டுக் கழகத்தை 8 விக்கெட்டுகளாலும் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது. அரியாலை யுத்ஸ் கழகம், சிவன் விளையாட்டுக் கழகத்தை இன்னிங்ஸாலும், சுண்டிக்குளி யுத்ஸ் கழகத்தை 7 விக்கெட்டுகளாலும் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது. இந்தப் போட்டிக்கு மொத்தம் 11 கழகங்கள் பங்கு பற்றியிருந்தன.

சென்ற வருடம் நடைபெற்ற இப்போட்டியிலும், அரியாலை யுத்ஸ் கழகமும், யங்லயன்ஸ் கழகமும் இறுதியாட்டத்தில் மோதியதில் அரியாலை யுத்ஸ் 16 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

இம்மாதம் 17-ம் திகதி நடைபெறும் இந்த இறுதியாட்டத்தில் யங்லயன்ஸ் கோஷ்டிக்கு வீரர் பி. யோகேஸ்வரனும், அரியாலை யுத்ஸ் கோஷ்டிக்கு வீரர் எம். ஜெயரட்ணமும் தலைமைதாங்குகின்றனர்.

(தே நி)

16-ம் திகதி

## சனசமூகநிலைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், வியா

விளையாட்டமைச்சின் ஆதரவுடன் சனசமூக நிலையங்களிடையே வருடா வருடம் நடாத்தப்படும் 'உதைபந்தாட்ட நொக்கவுட்' போட்டி இம்மாதம் 16-ம் திகதி பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

சென்ற வருடம் நடைபெற்ற இப்போட்டியில், 'தெக்கிளமேசன்' சனசமூக நிலையம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் இப்போட்டி மிகவும் விரிவான முறையில் நடைபெறுமென, விளையாட்டமைச்சின் உத்தியோகஸ்தர் திரு. என். தேவபாலன் தெரிவித்துள்ளார்.

(தே நி)

## அரசியல் நிர்ணயசபை நாளை கூடுகிறது

கோட்டை புதன்

அரசியல் நிர்ணயசபைக் கூட்டம் நாளை பிற்பகல் 2-30 மணிக்கு கூடவிருக்கிறது. சமீபத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாகக் கடந்த ஏப்ரல் மாதத்தில் கூடி நடவடிக்கை ஏதும் எடுக்கமுடியாதிருந்தது தெரிந்ததே.

## பிஷப்பின் இறுதிச் சடங்கு

கோட்டை புதன்

கொழும்பு பிஷப் அதி. வணக்கத்துக்குரிய ஹெரல்ட் டி. சொய்சாவின் இறுதிச் சடங்கு வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. கடந்த புதன்கிழமை லண்டனில் மரணமான பிஷப் ஆண்டவரின் சடலம் இன்றுகொழும்புக்கு கொண்டுவரப்பட்டது. மக்களின் இறுதி தரிசனத்துக்கு புதிய கதீட்றல் தேவாலயத்தில் சடலம் வைக்கப்படும்.

## இறைசேரி பதில் காரியதரிசி

கோட்டை புதன்

இறைசேரியின் பதில் காரியதரிசியாக திரு சி. ஏ. குரே நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்தவாரம் திரு எம். ராஜேந்திரா ஓய்வுபெற்றதை யடுத்து திரு குரே நியமனம்பெற்றுள்ளார்.

திரு குரே கடந்த ஆறுவருடங்களாக வர்த்தக, வரி, அந்நிய செலாவணிப் பகுதிகளின் நிதி அதிகாரியாகப் பணிபுரிந்தார் அரசாங்க கணக்குப் பகுதி கிளைக்கமிட்டியின் தலைவராகவும் இவர் உள்ளார்.

— —

## வருடாந்த உற்சவம்

சுன்னாகம், புதன்

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவிலின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 18-ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி அளவில் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகும் அவசரகால நிலைமையை முன்னிட்டு பகல் திருவிழா முற்பகல் 11 மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 6-00 மணிக்கும் முடிவடையும். 27-ம் திகதி தேர்த்திருவிழாவும் 28-ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 29-ம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

சங்கீதக் கச்சேரி, அலங்காரம், மின் அலங்கரிப்பு என்பன வழமைபோல இடம்பெறுமெனத் தெரியவந்துள்ளது.

......

## ஒத்திவைப்பு

மன்னார், புதன்

இம்மாதம் நடைபெறவிருந்த அரசாங்கப் பொது ஊழியர் சங்கத்தின் 7வது ஆண்டு நிறைவுவிழா தற்பொழுதுள்ள அவசரகால நிலைமை காரணமாக காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அதன் துணைச் செயலாளர் ... தெரிவித்துள்ளார்.

# 'சேமலாப நிதியால் தொழிலாளருக்கு நன்மை'

யாழ்ப்பாணம், வியாழன்

"சேமலாபநிதி சுருட்டுத் தொழிலாளர்களுக்கு அருமையான வரப்பிரசாதம். இதனைத் தொழிலாளர் வேண்டாம் எனப் புறக்கணித்தால் அதனால் முதலாளிகளுக்குத்தான் நன்மையே தவிர தொழிலாளர்களுக்கு நன்மையில்லை'

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் அவரை பேட்டிகண்ட சுருட்டுத் தொழிலாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. துரைராஜசிங்கம் மேலும் கூறியதாவது:-

"சுருட்டுத் தொழிலாளர்களுக்கு 15 ரூபா சம்பளம், கிழமைக்கு இரண்டுதரம் கணக்குப்பார்த்து வழங்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது, ஆனால் சில முதலாளிமார் மாதக்கணக்கில் சம்பளம் வழங்காது தட்டிக் கழித்துவருகின்றனர்

15 ரூபாவிற்குக் குறைவாக யாரும் முதலாளிமார் சம்பளம் வழங்கும் பட்சத்தில் உடனடியாக சங்கத்துக்கு முறையிட்டால் சட்ட மூலம் நடவடிக்கை எடுப்போம், சம்பளம் வழங்காமல் வேலைவாங்கும் முதலாளிகள் பற்றியும் புகார் கிடைத்தால் நடவடிக்கை எடுப்போம்

சுருட்டுத் தொழிலாளர் பல கஷ்டங்கள் மத்தியிலும் வேலை செய்துவருகின்றனர், முதலாளிமார் சம்பளத்தைக் குறைத்துக் கொடுக்க முயற்சி எடுப்பது வெறுக்கத்தக்க விஷயமாகும். சம்பளம் வெட்டும் முயற்சிகளுக்கு சுருட்டுத் தொழிலாளர் ஒருபோதும் இடம் கொடுக்கக்கூடாது'

......

## பதவி உயர்வு

திருமலை, புதன்

திருகோணமலை மாவட்டத்தின் தலைமைக் காரியாதிகாரியாக கடமையாற்றிய திரு எஸ். சிவானந்தம் அம்பாறை மாவட்ட மேலதிக உதவி அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்று செல்கின்றார். திருமலை மாவட்டத்தில் சேவை ஆற்றிய திரு எஸ். சிவானந்தம் சிரமதான முறையில் நாட்டில் பல அபிவிருத்திச் செயல் புரிந்தனர் எனத் தெரியவந்துள்ளது.

(ந நி)

## நேற்றுமுன்தினம் 84 பேர் கைது

கோட்டை, புதன்

நேற்றுமட்டும் நாடெங்கிலும் 84 பயங்கரவாதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் 52 பேர்கள் சரணடைந்தனர்

பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப்படை வீரர்களுக்குமிடையில் சில இடங்களில் மோதல் ஏற்பட்டுள்ளன.

கேகாலையிலுள்ள அறநாயக்கா பாதையில் பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் பாதுகாப்புப்படை வீரர் மீது சுட்டனர். இருபகுதியினருக்குமிடையில் துப்பாக்கிச்சண்டை நடந்தது

வவுனியா மாவட்டத்தில் தட்டிக்குளம் பகுதியிலும் மற்றும் இங்குள்ள சில பகுதியிலும் பாதுகாப்புப் படையினர் பயங்கரவாதிகளை வேட்டை நடத்தினார்கள்.

— —

## ஆசிரியர்களின் இடமாற்றம் ஒத்திவைப்பு

கோட்டை. புதன்

ஒத்திவைக்கப்பட்டிருந்த ஆசிரிய இடமாற்றம்எதுவும் இவ்வாண்டு நடைபெற மாட்டாதென்றும் இவ் இடமாற்றங்கள் வருகிற ஆண்டு ஜனவரிக்குப் பின்னரே நடைபெறும் என்றும் கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரியில் நடைபெறவிருந்த இடமாற்றங்கள் இம்மாதம் முதலாம் திகதி வரை பின்போடப்பட்டிருந்தது இப்போது அவசரகால நிலைமைகாரணமாக அதுவும் பின்போடப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

— —

## யாழ். மேயர் தமிழகம் சென்றார்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாண முதல்வர் திரு. அல்பிரட் துரையப்பா தமிழ் நாட்டுக்குச் சென்றுள்ளார், நகர அபிவிருத்தி பற்றியும் வீதிகள் விஸ்தரிப்பு மற்றும் வீடமைப்புத் திட்டங்கள் பற்றியும் அவர் தமிழ்நாட்டில் நேரில் அறிந்துகொள்வார் என்று அவரது சகாக்கள் தெரிவித்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிலிருந்து உப்பு நீக்க வீட்டுக்கு ஓர் இயந்திரம்!

ஒரு நாடு விரைவில் பொருளாதாரவளமைகாண வழி இருக்கிறது. எப்படி? பெருமளவில் உப்புநீரைச் சுத்த நீராக்குவதன் வழியாக இதனைச் சாதிக்கலாம்.

இந்திய நீர்வளப் பெருக்கு வல்லுநர் ஒருவர் அண்மையில் அமெரிக்காவுக்குச் சென்றபோது இந்தியாவுக்கு இந்த வாய்ப்பு இருப்பதைக் கண்டார். தண்ணீர் பற்றாக் குறைப் பிரச்னையைத் தீர்க்க அமெரிக்கா கையாளும் முறைகளை இந்த இந்திய வல்லுநர் நேரில் கண்டு அறிந்து வந்துள்ளார்.

இந்த வல்லுநர் பெயர் என் ஸி ரவால். மத்திய அரசு நீர், விசைவள ஆணைக் குழுவின் (ஸி டபிள்யூ பி ஸி) துணை நெறியாளர். நாட்டில் நீர்வளப் பெருக்குப் பணிகளை இணைக்கும் பொறுப்பு இக்குழுவினுடையதாகும். புதுடில்லியில் அவர் சென்றவாரம் இந்த அமெரிக்க முறையை ஒரு பேட்டியில் விளக்கினார். அவர் சொன்னதாவது: அமெரிக்க விஞ்ஞானிகள் 'எதிர்த் திசை ஊடுவலைப்பு' (ரிவர்ஸ் ஆஸ்மாஸிஸ்) முறையைப் பயன்படுத்துகின்றனர். இது உண்மையில் செம்மையான ஒன்று. செலவு குறைவான தும்கூட;

### வீட்டுக்கு ஒன்று

'வீடுகளில் பயன்படுத்துவதற்குக்கூட அவர்கள் உப்பு நீக்கும் இயந்திரம் ஒன்றை அமைத்திருக்கின்றனர். இதனைக் குழாய்க் கிணறுகளில் பயன்படுத்தலாம்; உப்புத் தண்ணீராக இருந்து அது வீடுகளில் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்கும் இடங்களிலும் இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தலாம். இந்தியாவில் ராஜஸ்தானிலும் கடற்கரையோரப் பகுதிகளிலும் இந்த இயந்திரத்தினை பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு மிக அதிகமாக உள்ளது'.

அமெரிக்காவிலே தண்ணீரின் தரம் அறிவதற்கும் ஆராய்ச்சிநடத்துகிறார்கள். இதிலும் ரவால் பயிற்சி பெற்றார். இந்தத் துறையில் இந்தியாவுக்கு மிகுந்த அக்கறையுண்டு என்றார், வீடுகளிலும் தொழில்களிலும் அனல் மின்விசை நிலையங்களிலும் நீர்ப்பாசனத் திட்டங்களிலும் சுத்தம் செய்யப்பட்ட நீர் பரவலாகத் தேவைப்படுகிறது. என்றார் அவர்.

பாசனத்துக்கும் தண்ணீர் தரமாக இருக்க வேண்டியது முக்கியம் என்பதை ரவால் வலியுறுத்தினார். 'கால்வாய்களுக்கு விடப்படும் தண்ணீரில் சில சமயங்களில் கெடுதல் உண்டு பண்ணும் உப்புகள் இருக்கின்றன. அவை என்ன உப்புக்கள் என்று ஆராய்ந்து அறியவேண்டியது அவசியமாகும். இதற்கு என்ன காரணம்? நீர்த்தேக்கத்திலிருந்து விடப்படும் தண்ணீர், பல ஆண்டுகளாகத் தேங்கியிருந்த பின்னர் முன்பு இருந்தபடியே இருப்பதில்லை'.

அமெரிக்காவில் தண்ணீர் ஆராய்ச்சி குறித்து நடக்கும் மாபெரும் பணிகள் தம்மை மிகவும் கவர்ந்துவிட்டன என்றார் அவர்.

ஸி. டபிள்யூ. பி. ஸி. ஆதரவில் யு. எஸ். ஏ. ஐ. டி. என்ற அமெரிக்க அரசு வளர்ச்சிப் பணி நிலையத்தின் திட்டத்தின்கீழ் ரவால் அமெரிக்காவில் ஆறுமாதம் தங்கியிருந்தார். டென்வரில் இருக்கும் நிலமீட்பு நிலையம் அமெரிக்க அரசின் நிலஉட்கூற்றியல் ஆய்வு நிலையம், பொறியியல் வல்லுநர் குழு டென்னஸ்ஸி பள்ளத்தாக்கு நிர்வாகம் (டி வி ஏ) ஆகியவற்றின் பணிகளையும் அவர் ஆராய்ந்தார்.

### சிமிட்டிக்குப் பதில்...!

நீரின் தரம் தவிரவும் நீர்த்தேக்கங்களில் படியும் வண்டல் ஆறுகள் ஓடைகளின் வண்டல் படியும் தன்மை, புகைக்கரியைப் பயன்படுத்துவது ஆகியவை குறித்தும் அவருக்கு அக்கறை இருந்தது. புகைக்கரி (ஃபிளை ஆஷ்) என்பது நிலக்கரியை எரிக்கும்போது வெளியாகும் கழிவுப் பொருள். இதனை கட்டுமானப்பணிகளில் சிமிட்டிக்குப் பதிலாகப் பயன்படுத்துவது பற்றி ரவாலுக்கு அக்கறை உண்டு. ஏன்? காங்கிரீட்டின் பண்புகளையும் இழக்காமல் கட்டுமாணப் பணியின் செலவைக் குறைக்கத்தான்.

சென்ற இருபது ஆண்டுகளில் ஏராளமான அணைகள் இந்தியாவில் கட்டப்பட்டுள்ளன. இன்னும் பல அணைகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் பல அணைகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் பல அணைகள் கட்டுவதற்கு திட்டம் வகுத்துள்ளார்கள். இவ்வணைகள் எல்லாம் எதற்காக? இந்தியாவின் நீர், விசை வளம் பெருக்குவதற்கேயாகும். இந்த அணைகள் கட்டுவது எளிதான பணியா என்ன? மாபெரும் முதலீடுகள் இவற்றுக்குத் தேவையாயிற்றே. எனவே பெருந்தொகைகள் செலவு செய்து கட்டுப்படும் அணைகள் எல்லாம் நீண்ட காலத்துக்கு இருக்க வேண்டுமல்லவா? இவற்றின் ஆயுள்காலம் 100 ஆண்டுகள் என்று குத்து மதிப்பாகச் சொல்லிவிடுவது வழக்கம், ஆனால் அதற்குப் பிறகும் இவை நீடித்திருக்க வேண்டியதவசியம். ஆயுட்காலம் கணக்கிட நீர்த்தேக்கங்கள் பற்றிய ஆய்வுகள் நடத்துகின்றனர். இந்தியாவில் பயன்படுத்தப்படும் முறை மிகவும் நேரம் பிடிக்கும் ஒன்று.

'அமெரிக்காவிலே வண்டலின் எடையை 'கம்ப்யூட்டர்' கணக்கிடு பொறிமுறை கொண்டு பதினைந்தே நிமிடத்தில் கணக்கிட்டுவிடலாம்' என்றார் ரவால்.

புகைக் கரியைப் பயன்படுத்துவது குறித்து அவர் சொன்னதாவது: 'அமெரிக்காவும் ஜப்பானும் புகைக்கரியை நிறையப் பயன்படுத்துகின்றன. அந்த நாடுகளே வெற்றிகரமாக புகைக்கரியைப் பயன்படுத்தியிருக்கையில் நாம் ஏன் பயன்படுத்தக் கூடாது? என்பதற்குக் காரணம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. மிஸிஸிப்பி மாநிலத்திலே விக்ஸ்பர்க்கிலுள்ள நீர்வழி ஆராய்ச்சி நிலையத்திற்குச் சென்றேன். அங்கு அவர்கள் புகைக்கரி குறித்துச் செய்யும் பெரும் பணியைக் கண்டேன். புகைக்கரியைப்பயன்படுத்த அதற்கு அவர்கள் தரம் நிர்ணயம் செய்கின்றனர். நாக்ஸ்வில் நகரில் இருக்கும் டி வி ஏ மின்விசை நிலையத்தில் புகைக்கரியை அவர்கள் கையாளுவதையும் நான் கண்டேன்.

'சிமிட்டிக்குப் பதிலாக புகைக்கரியைப் பயன்படுத்தினால் செலவை 30 முதல் 40 சதவீதம்வரை குறைக்க முடியும். அதுமட்டுமல்ல அது காங்கிரீட்டின் வலுவைப் பெருக்குகிறது. இது மிகவும் முக்கியமானதாகும்.

தமது அமெரிக்க அனுபவம் 'என் நாட்டுக்கு மிகவும் பயன்படுவதாக இருக்கும்' என்ற வாக்குறுதி அளித்து ரவால் பேட்டியை முடித்துக் கொண்டார்.

— எஸ். என். சேத்

# ஆபத்து நீங்கிய பின்னரே பாடசாலைகள் திறக்கப்படும்

## கல்வி மந்திரி கூறுகிறார்

கோட்டை, புதன்

ஆபத்து முற்றாக நீங்கி விட்டதென்று பாதுகாப்புப் படை தெரிவித்த பின்னரே பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும். நிலைமை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டதென பாதுகாப்புப்படைக்கு திருப்தி ஏற்படுவதற்கு முன்னர் பாடசாலைகளைத் திறப்பது பாதுகாப்பாக இருக்கமாட்டாது.

கல்வி அமைச்சர் அல் ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிராமப் புறங்களில் உள்ள சில பாடசாலைகளுக்கு நீண்ட தூரத்துக்கு மாணவர்கள் நடந்தே செல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அத்துடன் சில பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் ராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். சில பாடசாலைகள் மோசமாகசேதத்துக்குள்ளாகியிருக்கின்றன. இந்தப் பாடசாலைகள் திருத்தப்படாமல், ஆரம்பிக்க முடியாத நிலையிலுள்ளன என்று கல்வி மந்திரி கூறினார்.

பாடசாலைக்குச் செல்லும் இளம் சந்ததியினரின் பாதுகாப்பே எமது முக்கிய நோக்கமாகும் என்றும் கல்வி மந்திரி கூறினார்.

# தனியார் பாடசாலைகள்

கோட்டை, புதன்

நாட்டின் நிலைமை சீராகும் வரைக்கும் தனியார் பாடசாலைகள் அனைத்தையும் மூடிவைக்கும் படி கல்வி அமைச்சர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அரசாங்க பாடசாலைகள் திறக்கப்படும் போதே இவைகளையும் திறக்கும் படி [illegible] கொண்டார்.

# சுலோகங்கள் எழுதுவோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியா

வடபகுதியிலுள்ள சில சுவர்களிலும் மதில்களிலும் சுலோகங்கள் எழுதிய சில நபர்கள் பொலிசாரிடமும் இராணுவத்தினரிடமும் சிக்கியுள்ளனர்

சுலோகங்கள் எழுதுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர்கள் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்படுவார்களென்றும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்

வாலிபர்களில்சில சுலோகங்கள் எழுதும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

# இன்றைய பலன்

சித்திரை மாதம்30-ந் திகதி

[13-5-71]

மேஷம்- பகைமூட்டம் வட்டமிடும் வீணை வார்த்தைகளால் மனம் புண்படும். தொழில் துறையிலும் முட்டுக்கட்டைகள் தோன்றக் கூடும்.

ரிஷபம்- சந்திப்பின்மூலம் பயனுள்ளதொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். மகிழ்ச்சியான தினம்

மிதுனம்-புதிய தலையிடிதலை தூக்கும் வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும்.

கடகம்- புதிய பொருள்களை கொள்வனவு செய்வதற்கு இன்று நலம். மாணவர்களாயின் கல்வியில் அதிக ஆர்வம் பிறக்கும்.

சிம்மம்- எதிலும் முன்னிலையில் நிற்பீர்கள் பிறரின் கவனம் உங்கள்மீது செலுத்தப் படும். சொந்தமாக தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும்,

கன்னி- பொருள்ஈட்டுவதில் புதியவழிகளைக் கையாளுவீர்கள், எதையும் சிறப்பாக சாதிப்பதில் முதல் இடம் பெறுவீர்கள்.

துலாம்- வருமானத்தில் அபிவிருத்தி காணப்படுகிறது கடந்த சிலநாட்களாக நிலவிவந்த தயக்க நிலையில் இன்று நல்ல திருப்பம் ஏற்படும்

விருச்சிகம்- நிச்சயமற்ற நிலையால் வேதனைப்படுவீர் எதிர்பார்த்த பொருள்வரவு இன்று தடைப்படலாம். நாவடக்கம் நன்று.

தனு- பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. கொடுக்கல் வாங்கல்மூலம் அதிக ஆதாயத்திற்கு இடமுண்டு.

மகரம்- எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு.

கும்பம்- பந்த பாசம் உங்களைப் பரவசப்படுத்தும். உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக் கொடுப்பார்கள்.

மீனம்- கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும். இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள் பிள்ளைகளின் செல்வாக்குவளரும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# இன்னல் தீர்ந்தது

தாவடி, புதன்

தாவடி வடக்கு குழந்தை சிட்டிக் கலைவளவு காமாட்சி அம்பாள் ஆலய வீதி சீர்படுத்தப்பட்டு விட்டதால், போக்குவரத்துச் செய்வதில் மக்கள் இதுவரை காலமும் அடைந்த இன்னல்கள் நீக்கப்பட்டு விட்டன. இவ்வீதி உடுவில் கிராமசபையைச் சேர்ந்ததென்பது குறிப்பிடத்தக்கது

# கட்டுப்பாட்டு முறை

கோட்டை, புதன்

கூட்டுறவு மொத்த விற்பனைநிலையத் தலைவர் திரு ஆர். ஐ. ஜயசேகரா விநியோகிக்கப்படும் உணவுப் பொருட்களைக் குறைந்த அளவில் பகிர்ந்து கொள்ளும் கட்டுப்பாட்டு முறையொன்றைக் கொண்டுவர உத்தரவிட்டுள்ளார்.

கூட்டுறவு மொத்த விற்பனைக் கடைகளில் தினமும் விற்பனை செய்யப்படும் பொருட்களின் தொகையையும் இருப்புத் தொகையையும் பட்டியல் தயாரித்து அறிக்கை அனுப்பும்படியும் அதேபோல ஒவ்வொரு வார முடிவிலும் விற்பனைத் தொகை பழுதடைந்த தொகை ஆகியன பற்றிய அறிக்கை அனுப்பும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

# புதிய சமாதான நீதவான்கள்

அரியாலை, புதன்

சாமுவேல் வேதநாயகம், விசுவலிங்கம் சுப்பிரமணியம் வல்லிபுரம் பொன்னுத்துரை செல்லையா ஆதிசுத்தினம் ஆகியோர் யாழ்ப்பாண நீதிநிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# மட்டுநகர் கோட்டை ரயில்

கோட்டை, புதன்

'உதயதேவி' எக்ஸ்பிரஸ் வண்டி கோட்டையிலிருந்து காலை 9-15க்குப் புறப்பட்டு மாலை 5-15க்கு மட்டக்களப்பு போய்ச் சேரும். பின்னர் காலை 5-25க்கு மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு மாலை 2-00 மணிக்கு கோட்டை போய்ச் சேரும் இந்த ரயில்கள் ருகம, வெயாங்கொடை, பொல்காவெல, குருநாகல், மாகோ ஆகிய இடங்களில் மட்டும் தங்கிச் செல்லும்.


கலா நிலைய கேம்பிறிக்

WRITING PAD

(லெட்டர் பாட்)

5 1/2" X 8 1/2" — 50 தாள்

1. கோடு இல்லாதது சதம் 70

2. கோடு உள்ளது சதம் 95

வியாபாரிகளுக்கு கழிவு கொடுக்கப்படும்.

'ஈழநாடு'

(வர்த்தக அச்சகப் பகுதி)

த. பெ. எண். 49 — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

பிறர் கண்ணில் இருக்கும் உத்தரத்தை எடுக்கு முன், உன் கண்ணில் இருக்கும் துரும்பை எடு.
— இயேசுநாதர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் சித்திரை மாதம் 30 - ந் திகதி ( 13 - 5 - 71)

## கல்வி அமைச்சரின் வேண்டுகோள்

பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்கும் நிதிக்கு ஒருநாள் சம்பளத்தை வழங்கும்படி பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விச்சேவைப் பகுதியைச் சேர்ந்த ஊழியர்கள் அனைவரையும் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் கேட்டுக்கொண்டுள்ளார். இந்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து அவர்கள் தாராளமாக உதவுவார்கள் என்று நம்பிக்கை கொண்டிருக்கும் கல்வி அமைச்சர், இந்த நிதியைக்கொண்டு பயங்கரவாதிகளால் சேதப்படுத்தப்பட்ட பாடசாலைகளைப் புனரமைக்கலாமென்றும் எதிர்பார்க்கிறார். கல்வி அமைச்சரின் இந்தவேண்டுகோள் வீண்போகமுடியாது. பாடசாலை ஆசிரியர்கள், கல்விச்சேவைப் பகுதி ஊழியர்கள் மட்டுமல்ல பெற்றோரும் மற்றோரும் இந்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து நல்ல தொண்டிற்கு தாராளமாக உதவினாலும் என்ற ஆத்ம திருப்தியைப் பெறலாம். அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே பெரும் புண்ணியம் என்றார் மகாகவி பாரதியார். எத்தனையோ ஏழைகள் படித்துவந்த பாடசாலைகள் நாசமாக்கப்பட்டிருப்பதால் அவற்றைத் திருத்துவதற்கு உதவுவோர் பெரும் புண்ணியத்தைத் தேடிக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுவர் என்பது நிச்சயம்.

சோஷலிஸம் பேசுவதுடன் நின்றுவிடுவதல்ல. செயலில் வரவேண்டும். தருமம் முதலில் வீட்டில் தொடங்கவேண்டுமென்பார்கள். அதேபோல் தான் சோஷலிஸமும்! ஓர் உண்மையான சோஷலிஸ வாதியென்பதற்கொப்ப கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் ஐநூறு ரூபாய் முதலில் கொடுத்து இந்த நிவாரண நிதியை ஆரம்பித்திருக்கிறார். இது மற்றவர்களுக்கு வழிகாட்டும் முன்மாதிரியான நல்ல செயல். பாராட்டுக்குரியது! மற்றவர்களும் பின்பற்றவேண்டியது.

சேதமடைந்த பாடசாலைக் கட்டிடங்களைத் திருத்தி புனரமைப்பதற்கு உதவத்தயாராக இருப்பதாக தலைமையாசிரியர்சங்கங்களும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும் தாமாகவே முன்வந்து தெரிவித்திருக்கின்றன. பாடசாலைகள் மீண்டும் சீராக இயங்குவதற்கு இந்த உதவியையும் ஒத்துழைப்பையும் அளிக்க முன்வந்த இச்சங்கங்களைக் கண்டுநெஞ்சம் பெருமிதம் கொள்கிறது.

பணம் தேவைதான் பணம் மட்டும் தான் தேவையல்ல நிவாரண நிதிக்குப் பணத்தைக் கொடுத்து விடுவதுடன் எவரும் திருப்தியடைந்து விட முடியாது. கல்விச் சேவையிலீடுபட்டுள்ள ஆசிரியர்கள் ஊழியர்கள் மாணவர்கள் பெற்றோர் ஆகிய அனைவரும் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்குச் சேவை மனப்பான்மையுடன் சிரமதானம் மூலம் தங்கள் உழைப்பை அர்ப்பணிப்பது தான் மிகப் பெரியபணியாக இருக்க முடியும்!.

இதில் இன்னொருவேடிக்கையான அதேசமயம் வேதனையளிக்கக் கூடிய செய்தியென்னவென்றால் சில ஆசிரியர்களும் இந்தப்பயங்கரவாத இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்களென்பதாகும். ஆசிரியர்கள் சிலர் இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்களென்றால் அது சாதாரணமான விஷயமல்ல. வருங்கால நற்பிரஜைகளை உருவாக்கவேண்டிய மிகப் பெரிய பொறுப்பும் கடமையும் உள்ளவர்கள் வன்முறைச்செயல்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதாயின் ஒரு குடம் பாலில் ஒருதுளி விஷம் கலந்தது போலாகும். இந்த ஆசிரியர்களைப்பற்றித் தீவிர விசாரணை செய்து அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

அதேசமயம் பாடசாலை ஆசிரியர்கள் பலர் பெரும் கஷ்ட நஷ்டங்களுக்கிடையில் தங்கள் கடமையைச் சிறந்தமுறையில் விசுவாசமாகச் செய்து வருகிறார்களென்பதை நாமும் அறிவோம் நாடும் அறியும். எந்தத்துறையிலும் இருப்பது போல் ஆசிரியத் தொழிலும் சிலபுல்லுருவிகள் இருக்கக் கூடும். இவர்களால் ஆசிரிய சமூகத்துக்கே ஏற்படும் இழுக்கைத்தவிர்ப்பதற்கும் தடுப்பதற்கும் இதர ஆசிரியர்களே முன்வந்து தங்கள் மதிப்பைப்பாதுகாக்க வேண்டும்.

ஆசிரியர்களைக் குருவாக மதித்துஅதேசமயம் மதகுருக்களுக்கும் தனி மதிப்பளித்துவந்த பாரம்பரிய பண்பாடு இலங்கையிலும் இந்தியாவிலும் இன்று குறைந்து கீழ்த்தர நிலைக்கு வருவதால் அதற்கு அடிப்படைக் காரணங்கள் இருக்கத்தான் வேண்டும்.

எதற்கும் உதவாத பத்தாம் பசலிக் கல்வித் திட்டத்தை மாற்றியமைப்பதற்கு இதற்கு முன்னர் வந்த கல்வி அமைச்சர்கள் உட்பட இன்றைய கல்வி அமைச்சரும் முயற்சிசெய்து வந்திருக்கின்றனர். ஆயினும் இன்று தோன்றியுள்ள நிலைமையை உத்தேசித்து புதிய கல்வித்திட்டத்தை துரிதமாகப் புதிய முறையில் ஆக்கப்போவதாக அமைச்சர் மஹ்மூத் தெரிவித்திருப்பது நம்பிக்கை அளிப்பதாகும். இனியும் காலந்தாழ்த்தாது இந்தப் பெரும் நற்பணியைச் செய்வதற்கு ஆசிரிய உலகம் மட்டுமல்ல பெற்றோரும் மற்றோரும் உதவியும் ஊக்கமும் அளிப்பார்களென்று எதிர்பார்ப்போம்.

வடபகுதி அசைஸ் விசாரணை

# '1-ம் எதிரி பாவித்தது ஒற்றைக் குழல் துவக்கு'

## பருத்தித்துறை கொலை வழக்கு

யாழ்ப்பாணம், வியா.

'துரைசிங்கத்திற்கு வெடி விழுந்தது காலடியாதையும் வண்டில்பாதையும் சந்திக்கும் இடத்தில்தான். துவக்கு சூடு விழுந்திராவிட்டால் ரோட்டைக் கடந்து வயது பக்கமாகப்போனால் எனது தோட்டத்திற்குபோகலாம்', சம்பவம்நடந்த இடத்திற்கு படம்வரைபவர் வந்தார். அவருக்கு நான் விழுந்தஇடத்தைக்காட்டினேன்'

பருத்தித்துறை கொலை வழக்கில் எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் சி கமலநாதன் குறுக்கு விசாரணை செய்கையில் கந்தையா தேவராசா மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு நேற்று வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதிபதி வின்சன் தாமோதரம்முன்னிலையில் இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

கந்தையா தேவராசா மேலும் கூறியதாவது: தம்புராஜரத்தினம் என்னை ஆஸ்பத்திரியில் வந்து பார்க்கவில்லை. அவர் என்னை வீட்டில் வந்து பார்த்தார். எனக்கு எப்படிக்காயம் வந்ததென்று நான் சொல்லவில்லை. 1ம் எதிரிதான் வெடிவைத்து காயப்படுத்தியதாக அவருக்கு சொல்லவில்லை. இந்த வழக்கு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடந்தபோது தம்புராஜரத்தினத்தின் வழக்கும் நடந்தது.

வழ: ஆஸ்பத்திரிக்கு உம்முடன் யார் யார் வந்தார்கள்?- நான் மயக்கமடைந்துவிட்டேன் எனக்குத் தெரியாது.

வழ: 12ம் திகதி முழுவதும் மயக்கமாகவிருந்தீர்?- ஆம்.

வழ: 12ம் தேதி சம்பவம் பற்றி யாருக்கும் சொல்லவில்லை?- இல்லை

வழ: நொத்தாரிஸ் காணிக்கு பயங்கர ஆயுதங்களுடன் எதிரிகளை தாக்கும் நோக்கத்துடன் போனீர்கள்?- இல்லை.

வழ: இந்தச் சம்பவத்தில் முதல் காயமடைந்தது சிவபாலகுணம்?- இல்லை.

வழ: பல வருடம் கமக்காரராக இருந்திருக்கிறீர்?- ஆம். வழக்கமாக காலையில் வேலைக்குப் போவேன். வேறு வேலை இருந்தால் அதைமுடித்துவிட்டு எட்டு அல்லது 10 மணிக்கு வேலைக்குப் போவேன் கமக்காரர்கள் காலை 5 மணிக்கும்வேலைக்குப் போவார்கள்.

வழ: காலை 9 மணிக்கு கமக்காரர் தண்ணிச்சாப்பாடு புசிப்பார்கள்?- நான் அதை மறுக்கவில்லை.

வழ: அன்று மண்வெட்டி கொண்டு போகவில்லை?- இல்லை.

வழ: கொட்டான், வாள்களுடன் ஒருவர் துவக்கும் கொண்டுவந்தார்?. நான் மறுக்கிறேன்.

வழ: எதிரிகள் எல்லாரும் நொத்தாரிஸ் காணிக்கு தினமும் போவார்கள்?- 2-ம்-, 4-ம், 5-ம் எதிரிகள் போவார்கள்.

வழ: உமது அண்ணன் அழகையா தம்பியின் மகளை திருமணம் செய்தார்?- ஆம்

வழ: தம்பு வீட்டிற்கு நீர் போவதுண்டா?- இல்லை.

வழ: ஏன் கோபமா?- அவ்வளவு கோபமில்லை.

வழ: போகாததற்கு விசேஷ காரணமுண்டா?- இல்லை. அழகையா வேறு வீட்டில் இருக்கிறார். நான் அழகையா வீட்டிற்குப் போவேன். தம்பு வீட்டிற்குப் போவதில்லை

வழ: சம்பவத்தில் நீரும் காயமடைந்தீர்?- ஆம்

வழ: 1ம் எதிரி பாவித்தது ஒற்றைக் குழல் துவக்கா; இரட்டைக்குழல் துவக்கா? ஒற்றை

வழ: சம்பவத்தின்போது நீர் ஒற்றைக் குழல் துவக்கால் வெடித்தீர்?- இல்லை

வழ: 2-வது தோட்டா போட்டபின், துவக்கைப் பறித்துவிட்டார்கள்? இல்லை

வழ: அதன் பின்சண்டை நடந்தது 1ம் எதிரி வெடித்தார்? இல்லை

வழ: உமது ஆட்கள் அவர்களைத்தாக்கமுற்பட்டபோது 1ம் எதிரி வெடிவைத்தார்? நான்மறுக்கிறேன்.

2ம், 4ம், 5ம் எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் ஜே ஏ பி செரிபின் குறுக்குவிசாரணை செய்தார்.

இவ்வழக்கில் பருத்தித்துறையிலுள்ள குப்பாந்தறை என்ற இடத்தில், 69ம் ஆண்டு அக்டோபர் 12ம் திகதி வேலுப்பிள்ளை செல்வரத்தினம், சின்னத்தம்பி இராசதுரை, கந்தசாமி பரமானந்தம், இராசதுரை தேவராசா, இராசதுரை துரைராசா, சிவக்கொழுந்து நற்குணராசா ஆகியோர் சட்டவிரோதமாக கூட்டங்கூடியதாகவும், கூட்டத்தில்பொது நோக்கத்துடன், சுந்தரம் இரத்தினசிங்கம், கந்தையா தியாகராசா மற்றும் அவர்களுடன் வந்தவர்களையும் கொலை செய்யும் நோக்கத்துடன் வந்துள்ளார்களென்றும் அதே இடத்தில் அதே நேரத்தில் 1ம் எதிரியான வேலுப்பிள்ளை செல்வரத்தினம், சுந்தரம் இரத்தினசிங்கத்தை சுட்டுக் கொலை செய்ததாகவும், அதேஇடத்தில் அதே நேரத்தில் 1ம் எதிரியான செல்வரத்தினம் குறித்த கந்தையா தேவராசாவை சட்டவிரோத கூட்டதின் பொது நோக்கத்தின்படி கொலை செய்ய முயற்சித்ததாகவும் அதே இடத்தில் அதே நேரத்தில் 6 எதிரிகளும் சுந்தரம்இரத்தினசிங்கத்தை கொலைசெய்யமுயற்சித்ததாகவும் தேவராசாவை கொலை செய்ய முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## உலகவலம்

### வரட்சியின் கொடுமை

டெஹ்ரான்

தென்கிழக்கு ஈரானில் நிலவும் கடும் வரட்சியால் ஆயிரக்கணக்கான ஆடுகள் இறந்துள்ளன. இங்குள்ள கிராமவாசிகள் இவ்வரட்சியைப் பொறுக்கவியலாது கஷ்டப்படுகிறார்கள்.

தென்கிழக்கு ஈரானின் வரலாற்றில் இத்தகைய வரட்சி ஏற்படவில்லை எனக் கூறப்படுகிறது. இந்தவரட்சி காரணமாக இங்குள்ள பெருந்தொகையான நீர்ப்பாசன வயல்கள் அழிந்துள்ளன. மக்களும் குடிப்பதற்கு நீர்பெறுவதற்கு கஷ்டப்படுகிறார்கள்.

### 'நாங்கள் வெளியேற நேரிடும்'

லண்டன்

'இந்த நிலைமை நீடிக்குமானால் நாங்கள் மூட்டை கட்டிக் கொண்டு வேறு இடத்துக்குப் புறப்பட வேண்டியதுதான்.'

இவ்வாறு பிரிட்டிஷ் வர்த்தகர் ஒருவர் கருத்துத்தெரிவித்துள்ளார். கைத்தொழில் நிலையங்களிலும் மற்றும் ஸ்தாபனங்களிலும் தொடர்பாக ஏற்பட்டுள்ள வேலைநிறுத்தங்கள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு சம்பள உயர்வு ஆகியவற்றால் கைத்தொழில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்தே மேற்படி கருத்தை அவ்வர்த்தகர் வெளியிட்டுள்ளார்.

இதுவெறும் பீதியூட்டும் கதையல்லவெனவும் அநேகமான பிரிட்டிஷ் ஸ்தாபனங்கள் வெளிநாடுகளின் உதவியை நாடுவதாகவும் கூறப்படுகிறது.

### கடத்தல் தொழிலில் பெண்கள்

ஜாகர்த்தா

இந்தோனேஷிய பெண்கள் தங்கள் குடும்பச் செலவைச் சமாளிக்கக் கடத்தல் தொழிலில் ஈடுபடுகிறார்களாம்.

இந்தோனேஷியஅரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் வேதனம் மிகக் குறைந்ததாகும். இதனாலேயே பெண்கள் மேற்படி கடத்தல் தொழிலில் ஈடுபடுகிறார்களாம்.

ஜாகர்த்தா துறைமுக அதிகாரிகள் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டும் நூற்றுக்கணக்கான பெண்மணிகள் இத்தொழிலில் ஈடுபட்டு அகப்படாமல் தொழில் நடாத்துகிறார்கள் எனக் கூறப்படுகிறது.

பூருக்குச் சென்று திரும்பியதும் 5,500 ரூபா வருமானம் பெறுவதாகவும் கூறப்படுகிறது

### செல்வாக்கு அதிகரிக்கிறது

ரோம்

மேற்கில் அதிக செல்வாக்கும் அதிகாரமும் உள்ள இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி அடுத்த சில மாதங்களில் மேலும் செல்வாக்குடையதாகும் எனக் கூறப்படுகிறது.

இத்தாலியை தற்போது ஆட்சிபுரியும் இடதுசாரிக் கூட்டணி அரசிற்குள் ஏற்பட்டுள்ள பகைமை, போட்டி ஆகியனவே கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு அதிகரிப்பதற்குக் காரணமாகவும் எனத் தெரிகிறது.

### மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், வியாழன்

நவாலி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் மண்டலாபிஷேகமும், நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் நாளை நடைபெறவிருக்கிறது. 15ந் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகிப் பத்து நாட்கள் உற்சவம் நடைபெறும். 25ந் திகதி கொடி இறக்கமும், வைரவர் பொங்கலும் நடைபெறும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதி 68-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு மே மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org